பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

14 08 2022 7 15 (9-00)

ஞாயிற்றுக்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள்

1) தேசத்தின் சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் வெற்றிக்கு அடையாளம் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2) 2047ஆம் ஆண்டு சுதந்திர நூற்றாண்டை கொண்டாடும் வேளையில், விடுதலைப் போராட்ட தியாகிகளின் கனவுகளை நனவாக்கி, சாதனை படைக்க வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) அனைத்து வேறுபாடுகளையும் கடந்து, ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற உணர்வில் நாம் இணைக்கப்பட்டிருக்கிறோம் என்றும் திருமதி. திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.

4) தில்லி செங்கோட்டையில் பிரதமர் நாளை தேசியக்கொடியை ஏற்றி வைத்து, சுதந்திர தின உரையாற்றவுள்ளார்.

5) இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்திற்கு பொதுமக்கள் அளித்து வரும் பிரமாண்டமான வரவேற்பு தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

----*இனி விரிவான செய்திகள்*---

நாட்டின் சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் மிகப் பெரிய வெற்றியின் அடையாளம் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

நாட்டின் 76 வது சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, இன்றிரவு 7 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றிய அவர், நாட்டின் 75-வது ஆண்டின் அடையாளமாக நாட்டு மக்களின் இல்லங்களில் மூவண்ண தேசியக் கொடி பறந்து கொண்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

நாட்டின் விடுதலைக்காக போராடிய தியாகிகளை இந்நாளில் நினைவு கூர்வதாக குறிப்பிட்ட குடியரசுத் தலைவர், சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் பழங்குடியின மக்களின் பங்கு மகத்தானது என்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் பண்பாடும் கலாச்சாரமும் மனிதாபிமானத்தையும், சமத்துவத்தையும் அடிப்படையாக கொண்டது என்றும் இந்த உணர்வுகளை ஆன்மீகவாதிகளும், சிந்தனையாளர்களும் தொன்றுதொட்டு நமது உள்ளத்தில் பதியவைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தேசப்பிதா மகாத்மா காந்தி உள்ளிட்ட தலைவர்கள் நவீன இந்தியாவிற்கு ஏற்ற வகையில், நமது பண்டைய கலாச்சாரத்திற்கு புதிய வடிவத்தை உருவாக்கி தந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சி அதிகாரத்தை அடிப்படை மக்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற தத்துவத்தை தேசப்பிதா நமக்கு உணர்த்தினார் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஜனநாயகம் இந்திய மக்களின் பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் அடிப்படையாக கொண்டது என்றும் திருமதி. திரௌபதி முர்மு கூறினார்.

நாட்டிற்காக தியாகம் செய்த தலைவர்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களை தேசம் என்றும் மறக்காது என்று கூறிய அவர், அவர்களின் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் பொறுப்பு நமக்கு உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

2047ஆம் ஆண்டு நாட்டின், நூற்றாண்டு சுதந்திர விழாவை கொண்டாடும் வேளையில், சுதந்திரப் போராட்ட தியாகிகளின் கனவுகளை நாம் நனவாக்கி, சாதனை படைக்க வேண்டும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளிக்கும் வகையில், நாம் கட்டமைத்துள்ள தற்சார்பு இந்தியா இயக்கம், இந்த இலக்கை எட்டுவதற்கான திறனை அளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கோவிட் பெருந்தொற்றினால் ஒட்டுமொத்த உலகமுமே பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானபோது, இந்தியா விரைவான பொருளாதார

வளர்ச்சியை பதிவு செய்ததாகவும், இதனால் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை பாதுகாக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உருவாக்கப்பட்ட கோவிட்-19 தடுப்பூசிகள், உலக சமுதாயத்திற்கே உதவியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

200 கோடிக்கும் மேற்பட்ட தடுப்பூசி டோஸ்களை நாட்டு மக்களுக்கு, மாபெரும் தடுப்பூசி இயக்கத்தின் மூலம் செலுத்தி, சாதனை படைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய இந்தியாவை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், டிஜிட்டல் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நாட்டை வளர்ச்சிப் பாதையில் அவர்கள் எடுத்துச் செல்வார்கள் என்றும் குடியரசுத் தலைவர் கூறியுள்ளார்.

மருத்துவம், கல்வி, பொருளாதாரம் ஆகிய அனைத்து துறைகளிலும் நாட்டின் நிர்வாகத் திறன் மேம்பட்டிருப்பதாக தெரிவித்த அவர், தேசத்திற்கு முதலிடம் என்ற சிந்தனையோடு நமது செயல்கள் இருக்க வேண்டும் என்றும் அப்போது தான் உன்னதமான நிலையை எட்டும் இலக்கை எளிதாக அடைய முடியும் என்றும் கூறியுள்ளார்.

ஏழை எளிய மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க, பிரதமரின் வீட்டுவசதி திட்டம், அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் போன்றவை பயனுள்ளவையாக இருப்பதையும் குடியரசுத்தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மகளிர் சமுதாயம், அனைத்து தடைகளையும் தாண்டி, பொருளாதார மற்றும் சமூக ரீதியாக முன்னேற்றம் காண்பது, வளர்ச்சியின் அடையாளமாக உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பாலினப் பாகுபாடு களையப்பட்டு, அனைத்து துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளில் 14 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதையும் குடியரசுத் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களுக்கு இடையே சமூக ரீதியாக வேறுபாடுகள் பல இருப்பினும் தேசப்பற்று என்ற ஒரே நூலில் நாம் இணைக்கப்பட்டிருக்கிறோம் என்றும், ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற உணர்வோடு நாம் கைகோர்த்து நிற்கிறோம் என்று அவர் கூறியுள்ளார்.

இயற்கை வளங்களான மலைகள், காடுகள், விலங்குகள், பறவைகள் நீர்ஆதாரங்கள் உள்ளிட்டவற்றை பாதுகாக்க வேண்டும் என்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சவால்களை உறுதியோடு எதிர்கொண்டு, எழில்மிகு

இந்தியாவை உருவாக்க வேண்டும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டார்.

குடியரசு துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், நாட்டு மக்களுக்கு 76வது சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

கடந்த 75 ஆண்டு சுதந்திர இந்தியாவில், நாம் பெற்றுள்ள முன்னேற்றத்தை கொண்டாடும் வேளையில், நமக்கு இந்த விடுதலையை தேடித்தந்த தியாகமும் வீரமும் கொண்ட சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைவுகூர்ந்து, அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவோம் என்று அவர் கூறியுள்ளார்.

தேசபக்தி, அன்பு, தியாகம் போன்ற நற்பண்புகளை இளைய சமுதாயத்தினரிடம் ஊக்குவிக்க வேண்டும் என்றும் குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

------

நாட்டின் 76வது சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி தில்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

இதனையொட்டி, தலைநகர் தில்லியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. தில்லி மாநகர் முழுவதும் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

செங்கோட்டையைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு காரணங்களுக்காக, நாளை காலை 4 மணி முதல் காலை 10 மணிவரை எட்டு முக்கிய சாலைகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இன்றிரவு 10 மணிமுதல் தில்லியின் முக்கிய பகுதிகளுக்கு, வர்த்தக வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

மெட்ரோ ரயில் நிலையங்களிலும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில், சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில், காவலர்களுக்கான பதக்கங்களை முதலமைச்சர் வழங்கவுள்ளார்.

----

நாடு முழுவதும் 3 நாட்கள் தேசியக்கொடியை ஏற்ற வேண்டும் என்ற மத்திய அரசின் அழைப்புக்கு பொதுமக்களிடம் பிரமாண்டமான வரவேற்பு காணப்படுவது மகிழ்ச்சியளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், நாடு முழுவதும் அனைத்து தரப்பு மக்களும் இந்த இயக்கத்தில் உற்சாகமாக பங்கேற்று வீடுகளில் கொடியேற்றியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த இயக்கத்திற்கு பங்களிப்பை வழங்கிய இளைஞர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் தாம் பாராட்டு தெரிவிப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

தங்கள் வீடுகளில் ஏற்றப்பட்ட தேசியக்கொடியுடன் புகைப்படங்களை **Har Ghar Tiranga.com** வலைதள பக்கத்தில் பகிர்ந்து கொள்ளுமாறு திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

-----

இல்லம் தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் தமிழகத்திலும் உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது,

பொதுமக்கள் தங்கள் வீடுகளிலும், வணிக நிறுவனங்களிலும் தேசியக்கொடியை ஏற்றி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

தனியார் வாகனங்கள் மற்றும் டாக்ஸி ஆட்டோக்களும் தேசியக்கொடியுடன் வலம் வந்து கொண்டிருக்கின்றன.

சென்னை துறைமுகத்திலும், பெசண்ட் நகர் கடற்கரையிலும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில் மத்திய கப்பல்

போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்தா சோனாவால் தேசியக்கொடியை கையில் ஏந்தி, பிரச்சாரம் மேற்கொண்டார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் செய்தியில், இந்த இயக்கத்தில் தாம் பங்கேற்றிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

கடற்கரைகளை தூய்மையாக பராமரிப்பது, நமது கடமை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பெசண்ட்நகர் கடற்கரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாணவர்களும், பொதுமக்களும் தேசியக்கொடியை கையில் ஏந்தி மத்திய அமைச்சருடன் பேரணியில் கலந்து கொண்டனர்.

திருவள்ளூரில் இன்று நடைபெற்ற தேசியக்கொடி பேரணியில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு முருகன் மற்றும் பிஜேபி தொண்டர்கள் பங்கேற்றனர்.

தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தை சிறப்பிக்கும் வகையில் கல்லூரி ஆசிரியர்களும், தேசிய மாணவர் படையினரும் இணைந்து தயாரித்த 75 அடி நீள தேசியக் கொடி இன்று சேலத்தில் பறக்கவிடப்பட்டது.

-----

நாட்டின் 75வது விடுதலைப் பெருவிழாவில் மூவண்ணக் கொடியுடன் விடுதலைக்காக பாடுபட்ட தியாகிகளை போற்றுவோம் என்று திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

இந்திய அளவில் தமிழகம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களும் ஒன்றிணைந்து, விடுதலைப் பெருவிழாவை சிறப்பாக கொண்டாடுவோம் என்று இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

----

சுதந்திரப்போராட்ட வீரர் ஒண்டி வீரனின் தபால் தலை, அவரது நினைவு தினமான இம்மாதம் 20ஆம் தேதி, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் வெளியிடப்படும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் தெரிவித்துள்ளார்.

75வது விடுதலைப்பெருவிழாவை ஒட்டி சென்னையில் இன்று தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில், தேசியக்கொடியை ஏற்றிவைத்து, பொதுமக்களுக்கு தேசியக் கொடிகளை வழங்கிப் பேசிய அமைச்சர், பிரதமரின் அழைப்பை ஏற்று தமிழக மக்களும் தங்கள் வீடுகள், கடைகள் மற்றும் அலுவலகங்களில் மூவண்ணக் கொடியை ஏற்றி, ஆதரவளித்து வருவதற்கு தமது பாராட்டுகளை தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

தேசியக்கொடிக்கு தமது இன்னுயிரை அளித்த கொடிகாத்த திருப்பூர் குமரனின் தியாகத்தையும், இந்நாளில் நினைவுகூருவோம் என்றும் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

-----

சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசிய அளவில் காவல்துறை விருதுகளை உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. ஆயிரத்து 82 பேர் இந்த விருதுகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

-----